செ.வெ.எண்.11 நாள்:04.04.2020

# பத்திரிக்கைச் செய்தி.

கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுப்பதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாடு முழுவதும் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரியலூர் மாவட்டத்திலிருந்து இறப்பு, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திருமணம் மற்றும் அத்தியாவசிய பயணங்களுக்கு வெளியூர் செல்ல https://ariyalur.nic.in என்ற இணையதளத்தில் COVID-19 - click here to apply for vehicle movement pass (epass) என்ற Link -யினை பயன்படுத்தி விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் செய்யும்போது வாகனத்தின் R.C.Book, இன்சூரன்ஸ் நகல், ஓட்டுநரது உரிமம், பயணம் செய்பவர்களின் ஆதார் அட்டை நகல் மற்றும் பயண நோக்கத்திற்கான ஆவணங்கள் ஆகியவற்றினை இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாராது கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியினை தவறாது அளிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட அனுமதியினை (Vehicle EPASS) விண்ணப்பதாரர்கள் தங்களது மின்னஞ்சலில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

எனவே இந்த சேவையினை தேவைப்படுவோர் பயன்படுத்தி கொள்ளவும், வாகன அனுமதிக்கு அலுவலகத்திற்கு நேரடியாக வருவதினை தவிர்க்குமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**